3. கவன ஈர்ப்பு.

ஒட்டன்சத்திரம் பஞ்சாயத்து ஒன்றியம் புளியமரத்துக்கோட்டை கிராமத்தில் அரிசனங்களின் வீடுகள் தீ வைக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ரா. உமாநாத், ஜி. மூர்த்தி, ஜே.சி.டி. பிரபாகரன், என். வரதராஜன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஆர். கிருஷ்ணன், என். பழனிவேல், எம். செல்லமுத்து, கே. ஆர். சுந்தரம் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். அவர்களில் திரு. ரா. உமாநாத் இதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே,

"பழநி வட்டம், ஒட்டன்சத்திரம் பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியில் உள்ள புளியமரத்துக்கோட்டை கிராமத்தில் அரிசனங்களுக்குச் சொந்தமான வீடுகள் தீ வைக்கப்பட்டதால் அங்கு நிலவும் பதட்ட நிலை குறித்த'' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மதுரை மாவட்டம், மல்லிகாபுரத்தைச் சேர்ந்த திரு. கந்தசாமிக் கவுண்டர் என்பவர் புளியமரத்துக்கோட்டையைச் சேர்ந்த திரு. இராமன் மாதாரி என்பவரிடம் 24-6-1980 அன்று அத்திக்கோட்டை திருவிழா சந்தையில் இரண்டு பசுக்களையும் ஒரு கன்றையும் ஒப்படைத்து, அவைகளை புளியமரத்துக் கோட்டையில், திரு. தங்கவேல் கவுண்டரிடம் சேர்ப்பிக்குமாறு கூறியுள்ளார். திரு. இராமன் மாதாரி, திரு. கந்தசாமிக் கவுண்டரிடம் கூலியாக ரூ. 5 பெற்றுக் கொண்டார். திரு. இராமன் மாதாரி பசுக்களை ஒப்படைத்துவிட்டு, அத்திக்கோட்டையில் திரு. கந்தசாமிக் கவுண்டரிடம் ரூ. 5 கூலியாகப் பெற்றுக் கொண்டதைத் தெரிவிக்காமல், திரு. தங்கவேல் கவுண்டரிடமிருந்து மீண்டும் கூலியாக ரூ. 10 பெற்றுக் கொண்டிருக்கிறார். அத்திக்கோட்டையிலிருந்து திரும்பி வந்தவுடன் இதனையறிந்த திரு. கந்தசாமி கவுண்டருக்கு, திரு. இராமன் மாதாரியின் மீது கோபம் ஏற்பட்டுள்ளது. இதன் தொடர்பாக, 28-6-1980 அன்று பகல் 12 மணியளவில் புளியமரத்துக்கோட்டையில் பஞ்சாயத்து ஒன்று நடைபெற்றது. பஞ்சாயத்தின்போது, திரு. இராமசாமிக் கவுண்டர் இரண்டாம் முறையாக, கூலியாக பத்து ரூபாய் பெற்றுக்கொண்டதைப் பற்றிக் கேட்டு, திரு. இராமன் மாதாரியை அடித்திருக்கிறார். அங்கிருந்த மேலும் மூவர் திரு. இராமன் மாதாரியை அடித்திருக்கின்றனர். பயத்தினால் திரு. இராமன் மாதாரி அங்கிருந்து அவரது வீட்டிற்கு ஓடியிருக்கிறார். திரு. இராமசாமிக் கவுண்டரும் பஞ்சாயத்தில் கூடியிருந்த மற்றும் 5 பேர்களும் இராமன் மாதாரியை அவரது வீடுவரை துரத்திச் சென்றுள்ளனர். அங்கு இராமன் மாதாரி

யின் மகன் என்று தவறுதலாகக் கருதிக்கொண்டு, முருகன்என்ற 5 வயதுச் சிறுவனை அடித்திருக்கின்றனர். திரு. முருகன் கவுண்டர் என்பவர் திரு. இராமன் மாதாரியின் வீட்டிற்குத் தீ வைத்ததாகக் கூறப்படுகிறது. காற்றினால் தீ பக்கத்திலுள்ள வீடுகளுக்குப் பரவி, மேலும் 12 வீடுகள் எரிந்து விட்டன. அருகிலிருந்தவர்கள் தீயை அணைத்துவிட்டனர். தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டு, மேலும் தீ பரவாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது. உயிர் சேதம் ஏதுமில்லை. ஐந்து ஆடுகளும் ஐந்து கோழிகளும் இறந்துவிட்டன. திரு. இராமன் மாதாரியும் முருகனும் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். பொருள்களுக்குச் சேதம் சுமார் 10,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து, திரு. இராமன் மாதாரி கொடுத்த புகாரின்பேரில் வேடசந்தூர் காவல் நிலையத்தில், இ.பி.கோ. 147, 323, 436 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இரண்டுபேர் முன் ஜாமீன் பெற்றுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா ரூ. 100 பண உதவியும், தங்குவதற்கு இடம், உணவு, உடை வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. மதுரை (வடக்கு) மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் கிராமத்திற்குச் சென்று அமைதியை ஏற்படுத்தியுள்ளார். போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது இருதரப்பினரும் அடங்கிய அமைதிக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அமைதி காப்பதாக இருசாராரும் உறுதியளித்துள்ளனர். தற்பொழுது நிலைமை அமைதியாக உள்ளது.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயத்தை மிக முக்கியமான விஷயமாக அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். கிட்டதட்ட ஆவரேஜாக இன்று கிராமப்பகுதிகளில் ஹரிஜனமக்களின் நிலைமை இப்படியிருப்பதால் அதிகாரிகளும் அரசாங்கமும் ஹாண்டில் செய்வதைப் பொறுத்துத்தான் மற்றப் பகுதிகளில் எதிர்காலத்தில் பாதுகாப்பு கிடைக்கக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே இதில் ஒரு ஆஸ்பெக்ட் கூலிப் பிரச்னைபொறுத்து நிலப்பிரபுக்கள் அந்தக் கூலியை தொழிலாளர்கள் தலையில் திணிக்க வைப்பதில் ரௌடிஸத்தையும் கூண்டாயிஸத்தையும் உபயோகப்படுத்துகிற அச்சம் இருக்கிறது. அதேபோல் இந்தப் பிரச்னையில் இன்னொரு ஆஸ்பெக்ட் ஜாதிப் பிரச்னை. கூலிப் பிரச்னை பற்றி மிரட்டி தீர்த்தப்பிறகு கூட இவர்கள் இப்படி கேட்க இவ்வளவு கொழுப்பு இருக்கிறதா என்று பேசி தாக்கியவர்கள் நிலப்பிரபுக்கள். தாக்கியவர்களில் சம்பந்தப்பட்டவர்கள் ஐம்பது ஏக்கர் அறுபது ஏக்கர், நூறு ஏக்கர் நிலத்திற்கு சொந்தமான ஆள்கள் அதில் இருக்கிறார்கள்.

"Landlords attacking and doing rowdyism"

கூலிப் பிரச்னையில், இவ்வளவு கொழுப்பிருக்கிறதா என்று சொல்லி வம்புக்கு இழுத்து அடக்கவேண்டும் என்று ஜாதிப் பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார்கள். அப்படி வம்பு இழுத்துச்செய்கிறபோது ராமன் என்பவர், ஐயா, இதுதான் பிரச்னை தீர்ந்துவிட்டதே, திரும்பி வம்புக்கு இழுக்க வேண்டாம் தொத்த வக்கீல் தீர்த்து விட்டாரே என்று ஒருவர் பெயரைச் சொன்னார். அவர் பெயர் தொத்த வக்கீல். அந்த ஊரிலே அவரை தொத்த வக்கீல் என்றுதான் கூப்பிடுவார்கள். எப்.ஐ.ஆர் யிலும் தொத்த வக்கீல் என்றுதான் இருக்கிறது. நீ அரிசன் நீ எப்படிடா தொத்த வக்கீல் என்று சொல்லலாம் என்று அங்கேதான் ஆரம்பித்தது. அவரைப் பிடித்து அடித்து அவர் வீட்டிற்கு நெருப்பு வைத்த சம்பவங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. காலனியால் அடித்திருக்கிறார்கள். போலீஸ் ஹான்ட்லிங்கைப் பொறுத்தவரையில் நான் கேட்க விரும்புகிறேன்.

இந்த அறிக்கையில் இருசாராரும் அமைதி காக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்ருக்கிறது. தாக்கி இருப்பவர்கள் காஸ்ட் இந்துக்கள், அடிப்பட்டவர்கள் ஹரிஜனங்கள். ஆகவே இருசாரரும் அமைதி காக்கிற பிரச்னைக்கு எங்கே இடம்? நெருப்பு வைத்திருப்பவர்கள் காஸ்ட் இந்துக்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : கேள்வியாக கேளுங்கள்.

<u>திரு. ரா. உமாநாத் :</u> கால் அட்டன்ஷனில் கேள்வியை சிறிது கூடுதலாகக் கேட்கலாம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 12 பேர்கள் கேட்க வேண்டும்.

<u>திரு. எல். இளையபெருமாள் :</u> கடந்த ஒன்றரை மாதக்காலமாக ஹரிஜனங்களின் அவலநிலை பற்றி இந்த சபை நன்கு அறியும். அவை முன்னவர்கள் கூட மிகக் கருணையோடு சொன்னார். அப்படிச் சொல்லியிருந்தும்கூட திரும்பத் திரும்ப இபபடி வருவதால் மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் அதைப் பற்றி விளக்கமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இருப்பதால் பேரவைத் தலைவர் அவர்கள் அதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> 12 பேர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் சிறிது நேரம் பேசினால் அது பெரிய விளக்கமாகிவிடும்.

<u>திரு. ரா. உமாநாத் :</u> ஆகவே, நான் கேட்பது என்னவென்றால் இருசாரரும் அமைதி காக்கவேண்டும் என்று சொல்வதற்கு எங்கே இடம் இருக்கிறது? காஸ்ட் இந்துக்கள்தான் தாக்கிய

தாக, நெருப்பு வைத்ததாக ஸ்டேட்மென்ட்டில் சொல்லியிருக்கிறபோது போலீஸ் ரொட்டீன் கேஸ் போட்டு விட்டு பேசாமல் இருப்பது ஏன்? ஹரிஜனங்கள் தாக்கப்பட்டிருக்கிறபோது 107 ப்ரொஸ்டிங்க்ஸ் போடடு ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? அண்டச்சபிலிட்டி ஆக்டின்கீழ் தனியாக ஏன் கேஸ் போடவில்லை?

[முற்பகல் 10-20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதுபோல் இந்த பிரச்னையிலே ஜாதிப் பிரச்னையும் இருக்கிறது; அத்து மீறல் பிரச்னையும் இருக்கிறது. ஆகவே, இந்த குறிப்பிலே சொல்லப்பட்ட ராமன் மாதாரி என்பவர் இரண்டு இடத்திலே கூலி வாங்கியிருக்கிறார். அதற்காக பஞ்சாயத்து கூடி பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இந்த ராமன் மாதாரி என்கிற தாழ்த்தப்பட்ட தோழரை இந்த உயர்ந்த ஜாதிக்காரர்கள், மற்றவர்கள் சேர்ந்து அடித்திருக்கிறார்கள். இந்த கூலியை அதிகமாக வாங்கிதயதற்காக ஜனநாயக அமைப்பில் வழக்கு தொடர வேண்டுமே அல்லாமல் அவர்களாகவே சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு, அடித்திருப்பது தவறுதான். அதற்காக நடவடிக்கை எடுக்கக்கூடிய தன்மைகள் இருக்கின்றன. ஆகவேதான், இந்த ராமன் மாதாரி கொடுத்த புகாரின் பேரில், வேடசந்தூர் காவல் நிலையத்தினர் இ.பி.கோ. 147, 323, 436 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்து அதற்கான புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வழக்கை நடத்துவதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, போலீஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இரு தரப்பிலேயும் அமைதியை ஏற்படுத்துவதற்கு, அமைதி குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு தரப்பினர் தாக்குதலிலே ஈடுபட்டார்கள் என்று சொன்னால், இயற்கையாகவே மற்றொரு தரப்பினர் மனகொதிப்பு, கொதிப்புணர்ச்சி ஏற்படுகிறது. ஆகவே, தான் இரு தரப்பினரையும் அமைதிபடுத்த வேண்டுமென்று இந்த அமைதிக் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இரு தரப்பினரும், அமைதி காப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள். இப்போது அமைதி நிலவுகிறது. என்றாலும், இந்த வழக்கு சம்பந்தமான நடவடிக்கைகள் முறைப்படி எடுக்கப்பட்டு வருகின்றன. மேற்கொண்டு அரசிற்கும், காவல் துறைக்கும் சிலபல முக்கியமான உண்மைகள் கவனத்திற்கு கொண்டு வரப்படுமானால், அவைகள் பற்றியும் புலன் விசாரணை செய்வதற்கு பயனுள்ளதாக அமையும். ஆகவே அந்த வழக்குகள் தொடருவதற்கான முயற்சிகளை இந்த அரசு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1980 ஆகஸ்ட் 1]

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, அறிக்கையிலே நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், நான் கேட்க விரும்புவது, 9-ம் தேதி இந்த அரிசன் இருக்கின்ற ஊருக்குப் பக்கத்திலே சப்-கலெக்டர் வந்திருக்கிறார். இந்த கிராமத்திற்கு வரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அப்படி கூப்பிடும்போது அங்கே வந்து ஆறுதல் சொல்லவேண்டியது அவரது முதற் கடமை. ஆனால், அவர் வரவில்லை. He refused to go there. ஏன் அவர் அங்கே போக மறுத்தார்? இந்த அரசாங்கம் இதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்குமா? தவிர, 200 ரூபாய் கொடுப்பதற்குப் பதில் 100 ரூபாய்தான் கொடுத்திருப்பதாக இந்த அறிக்கையிலே இருக்கிறது. அதேபோல், தாசில்தார் ஒரு கடைக்காரரிடம் அரிசி கொடுக்கும்படி சொல்லியிருக்கிறார். அரிசி கொடுத்துவிட்டு, பின்னால் கிலோ ஒன்றுக்கு ரூ. 2 வசூலித்திருக்கிறார். ஆகவே, என்னுடைய கேள்வியெல்லாம், அந்த சப் கலெக்டர் ஏன் அங்கே போகவில்லை? அப்படிப்போய் ஆறுதல் சொல்லவில்லை? மறுப்பதற்கான காரணம் என்ன? அவர் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும். அதேபோல், 200 ரூபாய் மானியமும், 5000 ரூபாய்லோனும் கொடுக்கப்பட வேண்டும். அதைத்தவிர, இதிலே முழுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரக் குறிப்புகள் எல்லாம் என்னிடத்திலே இல்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் புகார்களை எல்லாம் விவரமாக எழுதி அனுப்புவார்களானால், அதன்மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்க முயற்சிக்கும்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில், கூலி கேட்டதால் வந்த தகராறு மாத்திரமல்ல. இதிலே சமுதாயப் பின்னணிப் பிரச்னையும் இருக்கிறது. அந்தமாதாரி என்பவர் 2 முறை கூலி வாங்கியிருக்கிறார் என்பதற்காக கவுண்டர் சமுதாயத்தால் அடிக்கப்பட்டிருக்கிறார். அவர் தனியாக மட்டும் அடிக்கப்படவில்லை. பஞ்சாயத்துதை கூட்டிவைத்து அடித்திருக்கிறார்கள். அதுவும் 5 பேர்கள் சேர்ந்து அடித்திருக்கிறார்கள். அந்த நேரத்திலே அந்த மாதாரி பஞ்சாயத்தார் முன்னாலே 16 முறைகள் காலிலே விழுந்து மன்னிப்பு கேட்டிருக்கிறார். அது தவிர, யார் புகார் கொடுத்தார்களோ, அவர்கள் காலிலும் 16 முறைகள் விழுந்திருக்கிறார். ஆக, 32 முறைகள் அப்படி காலிலே விழுந்த பிறகும், அவரை தெருத் தெருவாக ஓட ஓட விரட்டி அடித்திருக்கிறார்கள்.

அப்படி அடித்து உதைத்தது மட்டுமல்லாமல் அந்தப் பகுதியில் இருக்கும் எல்லா வீடுகளுக்கும் தீ வைத்துக் கொளுத்திருயிருக்கிறார்கள். இந்த அளவுக்கு இது மேல் சாதிக்காரர்களின் சாதி

வெறியைக் காட்டுவதாக இருக்கிறது. ஆகவே, அவர்கள்மீது தீண்டாமைக் குற்றத்திற்காகவும் வீடுகளைக் கொளுத்தியதற்காகவும் வழக்குகள் தொடரப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த ராமன் மாதாரி என்ற தாழ்த்தப்பட்ட தோழன் தாக்கப்பட்டிருக்கிறார் இச்சம்பவம் குறித்து இராமன் மாதாரி கொடுத்த புகாரின் பேரில் வேடச்சந்தூர் காவல் நிலையத்தில் இ. பி. கோ. 147 323, 436 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பேரில் புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. இதுப்பற்றிய வழக்குகள் தொடர்ந்து நடைபெற்று தவறு செய்தவர்கள் முறைப்படி தண்டிக்கப்படுவார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : புளியமரத்துக்கோட்டை கிராமத்தில் நடந்த சம்பவத்திற்கு இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்திருக்கிற விளக்க உரையில் அந்தக் கிராமத்தில் இரு தரப்பினரும் அடங்கிய அமைதிக் குழு ஏற்படுத்திருயிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அமைதி தற்போது நிலவி வருகிறது என்றாலும் அரிசன மக்களுடைய உள்ள உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அதிகாரிகள் விளக்க உரையில் குறிப்பிட்டதுபோல் நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். ஏற்கனவே காலந்தாழ்த்து நடவடிக்கை எடுத்ததன் காரணமாகத்தான் பாதகமான சூழ்நிலை ஏற்பட்டு அந்தப் பகுதியில் மட்டுமல்லாமல் சுற்றியுள்ள பகுதிகளிலும் அரிசன மக்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையே பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. தற்போது அமைதி இருந்தாலும் யார் இந்த நிலைமைகளுக்குக் காரணமோ. பொறுப்போ அவர்கள் மீது நடவடிக்கையைத் துரிதமாக எடுக்க முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே குறிப்பிட்டப்படி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. விசாரணை செய்து வழக்குகளை செம்மையாக நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளவற்றுக்கு மேல் உண்மைகள், விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமும் மற்றவர்களிடமும் இருக்குமானால் அவற்றை அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தமிழ் நாட்டில் பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுடைய புத்திசாலித்தனத்தை பரிசோதிக்க— 100 குருவிகள் ஒரு மரத்தில் இருக்கின்றன, அதிலே ஒரு குருவியைச் சுட்டுவிட்டால் மீதம் எத்தனை குருவிகள் என்று கேள்வி கேட்கப்படும்போது 99 குருவிகள் என்று சொல்லக்கூடிய

1980 ஆகஸ்ட் 1] திரு. என். வரதராஜன்

நிலை ஏற்படலாம். அதே போன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையை அதிகாரிகள் அனுப்பியிருக்கிறார்கள். நான் இங்கே சொல்ல வேண்டியது—ராமன மாதாரி வீட்டுக்குத் தீ வைத்தார்கள். அது மற்ற வீடுகளுக்கும் பரவி விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பக்கத்தில் ஐந்து மாடுகளும், ஐந்து கோழிகளும் இறந்திருக்கின்றன. அந்த ஊரில் இருக்கும் அரிசன மக்கள் அவ்வளவு பேரையும் அத்து விரட்டிவிட்டு நெருப்பு வைத்திருக்கிறார்கள். ராமன் மாதாரி மகன் என்று நினைத்து ஒரு ஐந்து வயது பையனைத் தாக்கியிருக்கிறார்கள். இதிலிருந்து எவ்வளவு கொடூரமான கோபத்தோடு தாக்குதல் நடந்திருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஐந்து வயதுப் பையனைத் தாக்கியதை சாதாரண சம்பவமாக அரசு கருதக்கூடாது. உண்மை என்ன? அத்திக்கோம்பையிலிருந்து மாதாரி மாடு பிடித்துக் கொண்டு வந்தான். ஐந்து ரூபாய்க்கு பதிலாக பத்து ரூபாய் கூலி பெற்றுக் கொண்டான். இந்த நாட்டில் ஒரு அரிசன் பத்து ரூபாயைக் கூலியாக வாங்க முயற்சிப்பது ஒரு பெரிய பாவமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் விளக்கங்கள் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடாது. கேள்வியாக கேட்க வேண்டும். கேட்கின்ற கேள்வி வகுப்புக் கலவரத்தைக் குறைப்பதற்கான முறையிலே இருக்க வேண்டுமே தவிர அதனை அதிகப்படுத்தும் வகையில் அமைந்துவிடக்கூடாது.

திரு. என். வரதராஜன் : இதிலே சர்க்கார் தீவிரமாக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

[முற்பகல் 10-30]

ஆகவே அங்கிருக்கும்படியான அலுவலர்களுடைய அறிக்கையிலிருந்து இது தெரிகிறது. ஒரு விசாரணைக்குழுவை அரசு நியமித்தால் நான் சாட்சியம் சொல்ல முன்வருவேன், சட்டமன்ற உறுப்பினர்கள் சாட்சியம் சொல்ல முன்வருவார்கள், ஊரே சாட்சியம் சொல்ல முன்வரும். இதை அடக்கினால்தான் அடுத்து வருகிற அக்கிரமங்களைத் தடுக்கமுடியும் என்ற முறையிலே அதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே குறிப்பாகக் கூறப்பட்டிருப்பது கந்தசாமிக் கவுண்டர் தங்கவேலு கவுண்டருக்கு மாடு வாங்கி அனுப்பினார். அதற்காக கந்தசாமி கவுண்டரிடம் இராமன் மாதாரி என்பவர் 5 ரூபாய் வாங்கினார். அப்படி அவர் வாங்கியதை தங்கவேலு கவுண்டரிடம் சொல்லாமல் தங்கவேலு கவுண்டரிடமும் 10 ரூபாய் வாங்கியிருக்கிறார், அவர் கொடுக்கவில்லை என்று நினைத்து இவரும் கொடுத்திருக்கிறார். அதைத் தொடர்ந்து இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல சில கொடுமைகள் நடைபெற்று இருக்கக்கூடும், நான் இந்த விவர அறிக்கையிலே இருந்ததைச் சொன்னேன். இந்த அறிக்கையிலே இல்லாத நிகழ்ச்சிகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். வழக்குத் தொடரப்படுகிறது. விசாரணையின்போது அவைகள் எல்லாம் சாட்சியமாக, அதற்கு உறுதுணையாக இருக்கின்ற முறையிலே அவைகளை கொண்டுவந்து நிறுத்தமுடியும. வழக்கு நடைபெறமுடியும். அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கிற அறிக்கை, போலீஸ் தரப்பில், நடந்த சம்பவத்திற்கு ஒரு சப்பைக்கட்டு கட்டுவது மாதிரி இருக்கிறது. வாங்கியதைச் சொல்லவில்லை என்ற குற்றச்சாட்டு மாத்திரமல்ல, மாதாரி மகன் என்று தவறுதலாக நினைத்துக்கொண்டு அடித்துவிட்டார்களாம், அவர் மகன் என்றால் மட்டும் அடிக்கலாமா? போலீஸ் அறிக்கை எப்படி வருகிறது பாருங்கள். அவர்கள் செய்த அந்தக் குற்றத்தை மறைக்கின்ற வகையிலே போலீஸ் தரப்பிலே கொடுக்கப்பட்ட அறிக்கையை அப்படியே இங்கே அவை முன்னவர் வைப்பது சரிதானா என்று கேட்டுவிட்டு இந்த சம்பவத்தின் காரணமாக எத்தனை பேர்கள் மொத்தம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், அதிலே அரிசனங்கள் எத்தனைபேர்கள் நிலச்சுவான்தார்கள் எத்தனை பேர்கள் என்பதை தெரிவிக்க வேண்டும், இரண்டு பேர்கள் மீதும் கேஸ் போடப்பட்டிருக்கிறது, இரண்டு பேர்கள் மீதும் போடுவது சரியல்ல, பாதிக்கப்பட்டவர்களுக்கு 100 ரூபாய் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். தற்செயலாக ஏற்பட்டுவிட்ட தீவிபத்திலே பாதிக்கப்பட்டு விட்டவர்களுக்கே ரூபாய் 200 என்று கொடுக்கிறபோது அரிசனங்களை அடித்து விரட்டிவிட்டு தீவைக்கப்பட்ட இந்த சம்பவத்திலே எல்லா குடிசைகளும் பாதிக்கப்பட்டு விட்டன, ஆகவே விசேஷ கவனம் செலுத்தி அவர்களுக்கு 100 ரூபாய் என்பதற்குப் பதிலாக 200 ரூபாய் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்ற விவரம் இதிலே குறிப்பிடப்படவில்லை. குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டுள்ளனர், இரண்டு பேர் முன் ஜாமீன் பெற்றுள்ளனர். இ.பி. கோ.வின் எந்த பிரிவின் கீழ் வழக்குகள் போடப்பட்டுள்ளன என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு 100 ரூபாய் வழங் கப்பட்டிருக்கிறது. தீப்பிடித்து விட்டால் பாதிக்கப்படுகிற ஏழை எளியவர்களுக்கு 200 ரூபாய் தரலாம் என்றும் நாம் முடிவு எடுத் திருப்பதால் இங்கேயும் அவர்கள் அதற்காக விண்ணப்பித்துக் கொள்கிறபோது அல்லது அந்த அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அந்தத் தொகையை வழங்க நடவடிக்கை

1980 ஆகஸ்ட் 1] [திரு இரா. நெடுஞ்செழியன்]

எடுக்கப்படும். நான் முதலிலேயே சொன்னப்படி இங்கே தரப்பட்ட தகவல்களை நான் கொடுத்திருக்கிறேன், இங்கே தரப்படாத தகவல்கள் இருந்தால் அவைகளைப்பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிரச்சினையிலே பல்வேறு சம்பவங்களைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் பூராவையும் ஆராய மாவட்ட நீதிபதி தலைமையிலே ஒரு விசாரணை கமிஷன் ஏற்படுத்தினால் சரியாக இருக்கும். அப்படியில்லாமல் உறுப்பினர்கள் தகவல்கள் கொடுத்தால் விசாரிக்கப்படும் என்று சொல்வது சரியல்ல, ஒரு நீதி விசாரணை அதற்காக அமைக்க ஏற்பாடுசெய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னபடி, வழக்கு தொடரப்பட்டிருப்பதாலே, புலனாய்வில் இருப்பதாலே தனி விசாரணை தேவையில்லை. ஆனால் இப்படிப்பட்ட சம்பவம் நடைபெறாமல் இருக்க என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று ஆராயலாம்; அதற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த)ச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1980ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த)ச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.